**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, PONNAMARAVATHY**

**CC.No. 62 of 2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | Pw-4/LW8 | Caste | : | |
| Name | : | தனபாலன் | வயது | : | 50 /2025 |
| Father Name/ Husband Name | : | அழகேசன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| Village | : | திருச்சி மாவட்டம் வையம்பட்டி காவல் நிலையம் | | | |
| Taluk | : | மணப்பாறை | | | |

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 29.07.2025

**(எதிரி ஆஜரில்லை, மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வையம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன்.

2. கடந்த 30.11.2021 ஆம் தேதி காலை 6 மணிக்கு பொன்னமராவதி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஆரோக்கியசாமி என்பவர் புகாரை பெற்று, நிலைய குற்ற எண் 301/2021 இ.த.ச பிரிவுகள் 379 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். மேற்படி** வழக்கு சம்மந்தமாக சம்பவயிடம் சென்று ஆரோக்கியசாமி, ஆரோக்கியதாஸ் முன்னிலையில் சம்வயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும்.** மேலும் சாட்சிகளான ஆரோக்கியசாமி, ஜேம்ஸ்வில்லியம்ஸ், அந்தோணிசாமி, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்தால் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிக்கு தக்க புலன் வைத்தேன். கடந்த 30.11.2021 ஆம் தேதி 11.30 மணியளவில் நான் மற்றும் நிலைய தலைமை

காவலர்கள் செந்தில் , அசார் முகமது ஆகியோருடன் குற்ற தடுப்பு நடவடிக்கையாக வார்ப்பட்டு சோதனை சாவடி அருகே வாகனத் தனிக்கை செய்து கொண்டிருந்தபோது TN 59 BX 9267 என்ற பதிவு எண் கொண்ட தோஸ்த்து வண்டியில் கான்கிரிட் கலவை போடும் இயந்திரத்தை இழுத்து கட்டிகொண்டு ஒருவர் வந்தார் . அவரை விசாரித்தபோது அவர் தனது பெயர் முருகேசன், தகப்பனார் பெயர் ராஜாங்கம் என தெரிய வர அவர் நிலைய குற்ற எண் 301/2021 சம்மந்தமான எதிரி என தெரியவந்ததால் குற்றக்காரணம் கூறி 11.45 மணிக்கு கைது செய்தேன். அப்போது சாட்சிகள் ராமசாமி மற்றும் இன்னாசிமுத்து ஆகியோர் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து 11.50 மணியளவில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆகும்.** எதிரி ஒப்படைத்த TN 59 BX 9267 என்ற பதிவு எண் கொண்ட Ashok leyland தோஸ்த் வண்டியையும், கான்கிரிட் கலவை போடும் இயந்திரத்தையும் சாட்சிகள் ராமசாமி, இன்னாசிமுத்து ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். எதிரியையும், வழக்கு சொத்துகளையும் நிலையம் கொண்டுவந்து மேற்படி வழக்கு சொத்துகளை படிவம் 91 ன்(எண்ணிக்கை 2) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.11 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படம்தான் மேற்படி தோஸ்த் வண்டியை காட்டும் புகைப்படம் ஆகும். அது அ.சா.ஆ.12 ஆகும்.** எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகள் ராமசாமி,இன்னாசிமுத்து ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவு 379 ன் கீழான 09.12.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தேன், அதனை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>**

**(எதிரிதரப்பு வழக்கிறஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)**

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்துகாண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது. அது சாட்சியின் உண்மையும் முழுமையான வாக்குமூலமாகும். |

**/ஒம்/திரு.சி. பழனிவேல்ராஜன்.**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
பொன்னமராவதி